**செப்டம்பர் – 01**

# TNPSC துளிகள்

- தேசிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (NIELIT) மூலம் உருவாக்கப் படவுள்ள இந்தியாவின் முதல் பிரத்யேக குவாண்டம் மற்றும் செயற்கை நுண்ணறிவு (AI) பல்கலைக்கழக வளாகத்தை அமராவதியில் அமைக்க ஆந்திரப் பிரதேசம் ஒப்புதல் அளித்துள்ளது.
- கடலோரக் கண்காணிப்பு, மீன்வளப் பாதுகாப்பு மற்றும் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகளுக்காக கோவா ஷிப்யார்ட் லிமிடெட் (GSL) நிறுவனம் ICGS அஜித் கப்பலை இந்தியக் கடலோரக் காவல்படையிடம் (ICG) ஒப்படைத்தது.
- தரை நிலையங்களுடனான அதிவேக தகவல் தொடர்புக்காக சர்வதேச விண்வெளி நிலையத்தில் (ISS) நாசா விண்வெளி வீரர் அனில் மேனன் மற்றும் ESA விண்வெளி வீராங்கனை சோஃபி அடெனோட் ஆகியோர் புதிய Ku-பேண்ட் ஆண்டெனாவை நிறுவி உள்ளனர்.
- விசாகப்பட்டினத்தில் உள்ள அமானாம் கிராமத்தில் AM AI தொழிற்சாலையின் ₹31,387 கோடி மதிப்பிலான 512 மெகாவாட் பசுமை செயற்கை நுண்ணறிவு (AI) தரவு மையத்திற்கு ஆந்திரப் பிரதேசம் ஒப்புதல் அளித்துள்ளது.
- பழங்குடியினர் நலத் திட்டங்கள், கொள்கைகள், திட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் பற்றிய தகவல்களை வழங்கும் செயற்கை நுண்ணறிவு (AI) சாட்போட்டான 'ஜாகோ' (Jago) என்பதை மத்திய பழங்குடியினர் விவகார அமைச்சகம் அறிமுகப்படுத்தியது.
- ஆந்திரப் பிரதேசத்தின் ஏலூர் மாவட்டம் முசுனூருவில் இந்தியாவின் முதல் மரபணு மாற்றப்படாத (non-GMO) அதிக அளவு விரியும் பாப்கார்ன் மக்காச்சோள கலப்பின விதையை குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அறிமுகப் படுத்தினார்.
    - உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்தக் கலப்பினம், அதிக அளவு விரியும் பாப்கார்ன் உற்பத்திக்காக கோர்மெட் பாப்கார்னிகா நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.
- சென்னை அருகே காட்டுப்பள்ளியில் லார்சன் அண்ட் டூப்ரோ (L&T) நிறுவனத்தால் கட்டப் பட்ட தனது முதல் உள்நாட்டு பல்நோக்கு கப்பலான 'சமர்த்தக்' கப்பலை இந்திய கடற்படை பெற்றுள்ளது.

# தேசியச் செய்திகள்

## தேசிய பிணவறை தரநிலைகள்

- பிணவறை மற்றும் பிரேதப் பரிசோதனை உள்கட்டமைப்பிற்கான தனது முதல் சீரான தேசியத் தரநிலைகளை இந்தியா இறுதி செய்துள்ளது.
- சுகாதாரச் சேவைகள் தலைமை இயக்குநரகத்தின் (DGHS) கீழ் செயல்படும் மருத்துவ நிறுவனங்களுக்கான தேசிய சபை மூலம் மருத்துவ நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இந்தத் தரநிலைகள் வெளியிடப்பட்டுள்ளன.
- பிணவறைகள் தரை தளத்தில், மருத்துவக் கழிவுப் பகுதிகளிலிருந்து தள்ளி, உடல்களைக் கொண்டு செல்வதற்கு என தனி நுழைவு வாயில்களுடன் இருக்க வேண்டும்.
- குளிர்பதனக் கிடங்கு 4°C முதல் 8°C வரை பராமரிக்கப்பட வேண்டும், மேலும் குறைந்த

பட்சம் நான்கு உடல்களை வைக்கும் திறனும், அடையாளம் காண தனித்துவமான வரிசை எண்களும் இருக்க வேண்டும்.

- மருத்துவ-சட்ட வழக்குகளின் உடல்கள் மற்ற உடல்களிலிருந்து தனியாக பாதுகாக்கப் பட வேண்டும்.




## இந்திய திட்ட நேர விதிகள்




- நுகர்வோர் விவகாரங்கள் துறை, சட்ட அளவியல் (இந்திய திட்ட நேரம்) விதிகள், 2026ஐ அறிவித்துள்ளது இதன் மூலம் இந்தியாவின் சட்ட, நிர்வாக, வணிக மற்றும் அதிகாரப் பூர்வ நோக்கங்களுக்கான கட்டாய நேரக் குறிப்பானாக இந்திய திட்ட நேரம் (IST), அதாவது UTC+5:30 மாற்றப்பட்டுள்ளது.
- புது தில்லியில் உள்ள CSIR-தேசிய இயற்பியல் ஆய்வகமானது (NPLI) அதிகாரப்பூர்வ ISTக்குப் பயன்படுத்தப்படும் தேசிய நேர அளவுகோலான UTC(NPLI)-ஐ பராமரிக்கிறது.
- பிராந்தியக் குறிப்புத் தரநிலை ஆய்வகங்கள் மற்றும் NavIC (இந்திய விண்மீன் தொகுப்புடனான வழிசெலுத்தல்) மூலம் அதிகாரப்பூர்வ IST பரப்பப்படும்.

- தொலைத்தொடர்பு, டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மற்றும் மின் தொகுப்பு அமைப்புகள் வலையமைப்பு நேர நெறிமுறை (NTP) மற்றும் துல்லிய நேர நெறிமுறை (PTP) ஆகியவற்றைப் பயன்படுத்தி IST உடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.
- இந்த விதிகள் அரசிதழில் வெளியிடப்பட்ட 180 நாட்களுக்குப் பிறகு, சுமார் 2027 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைமுறைக்கு வரும், மேலும் 2009 ஆம் ஆண்டு சட்ட அளவியல் சட்டத்தின் கீழ் விதிகளுக்கு இணங்கத் தவறினால் அபராதம் விதிக்கப் படும்.

# சர்வதேசச் செய்திகள்

## ஆப்பிரிக்க சுகாதாரப் பணியாளர்கள் திட்டம் 2035




- 2035 ஆம் ஆண்டுக்குள் குறைந்தபட்சம் 3 மில்லியன் சுகாதாரப் பணியாளர்களைச் சேர்க்கும் நோக்கத்துடன், ஆப்பிரிக்க சுகாதாரப் பணியாளர் செயல்திட்டம் 2026–2035 ஐ ஆப்பிரிக்க சுகாதார அமைச்சர்கள் ஏற்றுக்கொண்டனர்.
- சிறந்த திட்டமிடல், பயிற்சி, வேலைவாய்ப்பு மற்றும் பணியாளர்களைத் தக்கவைத்தல் ஆகியவற்றின் மூலம் கணிக்கப்பட்டுள்ள சுகாதாரப் பணியாளர்களின் பற்றாக் குறையை பாதியாகக் குறைப்பதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2024 ஆம் ஆண்டில் ஆப்பிரிக்காவில் 5.72 மில்லியன் சுகாதாரப் பணியாளர்கள் இருந்தனர் அதே நேரத்தில் குறைந்தது 943,000 பயிற்சி பெற்ற சுகாதார நிபுணர்கள் வேலையில்லாமல் இருந்தனர்.
- இத்திட்டமானது "திட்டமிடு, பயிற்றுவி மற்றும் தக்கவை" என்ற அணுகுமுறையைப் பின்பற்றுகிறது என்பதோடு இது பணியாளர் திட்டமிடல், தரமான கல்வி, வேலை உருவாக்கம் மற்றும் சிறந்த பணி நிலைமைகளில் கவனம் செலுத்துகிறது.
- 2035 ஆம் ஆண்டுக்குள், 10,000 பேருக்கு 27 ஆக இருக்கும் சுகாதார நிபுணர்களின் அடர்த்தியை 47 ஆக உயர்த்தவும், சராசரி வேலையின்மை விகிதத்தை 27 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாகக் குறைக்கவும் இது இலக்கு வைத்துள்ளது.
- அடிஸ் அபாபாவில் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் (WHO)

ஆப்பிரிக்காவுக்கான பிராந்தியக் குழுவின் 76வது அமர்வில் இந்தச் செயல்திட்டம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அரியவகை வலசைபோகும் வாத்து - மெர்கெல்லஸ் அல்பெல்லஸ்

- அசாமில் உள்ள லோகோவா வனவிலங்கு சரணாலயத்தில் அரிய வகை வலசைபோகும் வாத்தான ஸ்மேவ் (மெர்கெல்லஸ் அல்பெல்லஸ்) முதல்முறையாகக் காணப் பட்டது.
- ஸ்மேவ் என்பது அனாடிடே குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறிய மூழ்கும் வகையான வாத்து ஆகும்.
- இது வடக்கு யூரேசியாவில் இனப்பெருக்கம் செய்கிறது மற்றும் குளிர்காலத்தில் பனிக்கட்டிகள் இல்லாத நீர்நிலைகளை நோக்கி தெற்குப் பகுதிக்கு வலசைபோகிறது.
- இது இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியத்தின் (IUCN) செந்நிறப் பட்டியலில் தீவாய்ப்புக் கவலை குறைந்த (Least Concern) இனமாகப் பட்டியலிடப் பட்டு உள்ளது.
- லோகோவா வனவிலங்கு சரணாலயம் நாகோன் மாவட்டத்தில் பிரம்மபுத்திரா நதியின் தென்கரையில் அமைந்துள்ளது.





## உலகளாவிய வறட்சிக் கட்டமைப்பு


- மங்கோலியாவின் உலான்பாதரில் நடைபெற்ற 17-வது தரப்பினர்களின் மாநாட்டில் (COP17) உலகளாவிய வறட்சிக் கட்டமைப்பிற்கு ஒப்புதல் அளிக்க நாடுகள் தவறி விட்டன.
- முன்மொழியப்பட்ட கட்டமைப்பானது வறட்சித் தடுப்பு, முன்னெச்சரிக்கை அமைப்புகள், தேசியத் திட்டமிடல் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றை

மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

- சட்டப்பூர்வமாகக் கட்டுப்படுத்தும் மற்றும் தன்னார்வ விருப்பத் தேர்வுகள் ஆகிய இரண்டும் தீர்க்கப்படாமல் COP18 வரை ஒத்திவைக்கப்பட்டன.
- பாலைவனமாதலை எதிர்த்துப் போராடுவதற்கான ஐக்கிய நாடுகளின் மாநாடு (UNCCD), வருடாந்திர வறட்சி மீள்திறன் மற்றும் நிலத்தை மீட்டெடுப்பதற்கான நிதி இடைவெளி $278 பில்லியன் என மதிப்பிட்டுள்ளது.
- COP18 முதல் வறட்சியை நிரந்தரமான தனித்த நிகழ்ச்சி நிரலாக மாற்ற நாடுகள் ஒப்புக் கொண்டன.
- COP18 மாநாடானது எகிப்தின் ஷர்ம் எல்-ஷேக்கில் நடைபெறும்.




## அசாமில் யானைகள் வாழிட மீட்பு




- ஆக்கிரமிப்புத் தாவரங்களில் இருந்து தயாரிக்கப்படும் பயோச்சார் (biochar) எனப்படும் உயிரி அடுப்புக்கரியைப் பயன்படுத்தி யானைகளின் வாழிடத்தை மீட்டெடுப்பதற்காக அசாமின் உடல்குரி மாவட்டத்தில் உள்ள காலிங்துவார் காப்புக் காட்டில் இரண்டு ஹெக்டேர் பரப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

- சீரழிந்த வாழிடங்களை மீட்டெடுக்கவும் மற்றும் பூர்வீக தாவரங்களை அதிகரிக்கவும் சர்வதேச யானைகள் அறக்கட்டளை (IEF) இந்தத் திட்டத்திற்கு ஆதரவளிக்கிறது.
- லண்டானா கமாரா, குரோமோலேனா ஓடோராட்டா மற்றும் மிகானியா மைக்ரந்தா போன்ற ஆக்கிரமிப்புத் தாவரங்கள், குறைந்த ஆக்ஸிஜனுடன் கட்டுப்படுத்தப்பட்ட வெப்பமாக்கல் மூலம் பயோச்சாரை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும்.
- பயோச்சார் ஆனது மண்ணின் தரத்தை மேம்படுத்தவும், பூர்வீகத் தாவரங்களின் மீளுருவாக்கத்தை ஆதரிக்கவும், யானைகளின் வாழிடங்களை வலுப்படுத்தவும் உதவும்.
- ஆக்கிரமிப்புத் தாவர உயிர்ப்பொருண்மையை பயனுள்ள மண் திருத்தமாக மாற்றுவதன் மூலம் இத்திட்டம் சுழற்சி அணுகுமுறையைப் பின்பற்றுகிறது.
- காடுகளில் உணவு கிடைப்பது மேம்படுவதால், விவசாய நிலங்களை யானைகள் சார்ந்திருப்பது குறைந்து, மனித-யானை மோதலைக் குறைக்க இது உதவும்.

## 16 புதிய உள்நாட்டு விலங்கினங்கள்




- இந்திய வேளாண் ஆராய்ச்சி சபையானது (ICAR) 16 புதிய உள்நாட்டு கால்நடை மற்றும் நாய் இனங்களை அதிகாரப்பூர்வமாக பதிவு செய்துள்ளது.
- இனங்கள் பதிவு செய்யும் குழுவின் (BRC) 14வது கூட்டத்தில் இந்தப் பதிவு அங்கீகரிக்கப் பட்டது, இதன் மூலம் இந்தியாவின் மொத்த பதிவு செய்யப்பட்ட விலங்கினங்களின் எண்ணிக்கை 262 ஆக உயர்ந்துள்ளது.
- இந்த 16 இனங்கள் 9 விலங்கு வகைகளைச் சேர்ந்தவை மற்றும் இவை 13 மாநிலங்கள் மற்றும் 1 ஒன்றியப் பிரதேசத்தில் (ஜம்மு & காஷ்மீர்) காணப்படுகின்றன.
- புதிய இனங்களில் கொப்பல், மகாக்கௌசலி, பெரியார் மற்றும் உமர்தா மாடுகள்;

கோமஞ்சலி எருமை; பட்டிசி மற்றும் தோத்தாபுரி ஆடுகள்; மற்றும் அசோமி, கௌ தேபர், மாட்க்யால் மற்றும் சீமாஞ்சலி செம்மறி ஆடுகள் ஆகியவை அடங்கும்.

- இவற்றில் பிராஜ் கழுதை, காஷ்மீரிக் குதிரை, நாகல் பன்றி, சிக்கிம் காட்டெருமை மற்றும் தமிழ்நாட்டின் கோம்பை நாய் ஆகியவையும் அடங்கும்.
- ஹரியானாவின் கர்னாலில் அமைந்துள்ள ICAR-NBAGR (தேசிய விலங்கு மரபணு வளப் பணியகம்), இந்தியாவில் கால்நடை மற்றும் கோழி இனங்களைப் பதிவு செய்வதற்கான முதன்மை நிறுவனமாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலக மண் வள அறிக்கை 2026





- FAO (உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு) அமைப்பின் 2026 ஆம் ஆண்டிற்கான உலகின் மண் வளங்களின் நிலை குறித்த அறிக்கை, உலகளவில் மண் சீரழிவு மோசமாகி வருவதாகவும், தெற்காசியா, குறிப்பாக இந்தியா, கடுமையான சீரழிவை எதிர்கொண்டுள்ளதாகவும் காட்டுகிறது.
- பிராந்திய மதிப்பீடுகளில் பாதிக்கும் மேற்பட்டவை நிலையான மண் நடைமுறைகளை குறைவாகவோ அல்லது மிகக் குறைவாகவோ பின்பற்றுவதைப் பதிவு செய்துள்ளன; 58 சதவீதம் 2015 ஆம் ஆண்டு முதல் மோசமான நிலையைக் காட்டியுள்ளன, அதே சமயம் 10 சதவீதம் மட்டுமே முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன.
- மண்ணரிப்பு மிகப்பெரிய பிரச்சனையாக அடையாளம் காணப்பட்டுள்ளது, 81 சதவீத மதிப்பீடுகள் அரிப்பு மேலாண்மையை மோசம் அல்லது மிகவும் மோசம் என மதிப்பிட்டுள்ளன மற்றும் 65 சதவீதம் சீரழிவைப் பதிவு செய்துள்ளன.
- இந்தியாவில், சுமார் 30-37 சதவீத நிலங்கள் சீரழிந்துள்ளதாகவும், சுமார் 83 மில்லியன் ஹெக்டேர் நிலம் நீரரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது; இந்தியா ஆண்டுதோறும் சுமார் 4.8-5.3 பில்லியன் டன் மண்ணை இழக்கிறது.
- இந்தியா, வங்காள தேசம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் நிலைத்தன்மையற்ற அதிகப்படியான நைட்ரஜன் உபரியைக் கொண்டுள்ளன, மேலும் உலகளாவிய சராசரியான 59 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், இந்தியப் பயிர்களுக்குப் பயன்படுத்தப் படும் நைட்ரஜனில் 30-45 சதவீதத்தை மட்டுமே உறிஞ்சுகின்றன.

- ❖ இந்த அறிக்கை தவறாக வழிநடத்தப்படும் விவசாய மானியங்களை, குறிப்பாக நைட்ரஜன் யூரியாவிற்கு சாதகமாக உள்ளவற்றை எடுத்துக் காட்டுகிறது, மேலும் விவசாயம், நிலம், பருவநிலை மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த கொள்கைகளின் சிறந்த ஒருங்கிணைப்புக்கு அழைப்பு விடுக்கிறது.

## எங்கிருந்தும் பணி புரியும் குறியீடு 2026

- ❖ சர்வதேச பணியிடக் குழுவால் (IWG) வெளியிடப்பட்ட 2026 ஆம் ஆண்டிற்கான எங்கிருந்தும் பணி புரியும் குறியீட்டில் 77 புள்ளிகளுடன் சேர்க்கப்பட்ட ஒரே இந்திய நகரம் மும்பை ஆகும்.
- ❖ உலகளவில் மும்பை 50-வது இடத்தைப் பிடித்தது மற்றும் போக்குவரத்துச் செலவுகள், தங்குமிடம், பருவநிலை மற்றும் நெகிழ்வான பணியிட வசதி ஆகியவற்றில் சிறப்பாகச் செயல்பட்டது.
- ❖ பிராட்பேண்ட்/அகலப்பட்டை வேகம் மற்றும் தரம், உள்ளூர் நிகழ்வுகள் மற்றும் மகிழ்ச்சிக் குறியீடு ஆகியவற்றில் இது குறைவான மதிப்பெண்களைப் பெற்றது.
- ❖ பாங்காக் 106.5 புள்ளிகளுடன் முதலிடத்திலும், டோக்கியோ (96.5) மற்றும் பார்சிலோனா (95.5) அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- ❖ இந்தக் குறியீடு பருவநிலை, பிராட்பேண்ட்/அகலப்பட்டை இணைப்பு, தங்குமிடம், போக்குவரத்து, உணவு, கலாச்சாரம் மற்றும் நெகிழ்வான பணியிட வசதி ஆகியவற்றைக் கருத்தில் கொள்கிறது.
- ❖ குஷ்மன் அண்ட் வேக்ஃபீல்ட் நிறுவனத்தின் தரவுகளின்படி, நெகிழ்வான பணியிட முதிர்ச்சிக் குறியீட்டில் இந்தியா 100 புள்ளிகளைப் பெற்றுள்ளது.




# விளையாட்டுச் செய்திகள்

## உலக ஹியூமனாய்டு ரோபோ விளையாட்டுகள் 2026

- ❖ சீனாவின் ஹியூமனாய்டு ரோபோவான தியாங்காங் அல்ட்ரா 100 மீட்டரை 9.39 வினாடிகளில் கடந்தது, இது உசேன் போல்ட்டின் 9.58 வினாடிகள் என்ற ஆண்களுக்கான உலக சாதனையை விட வேகமானதாகும்.
- ❖ இது பெய்ஜிங் ஹியூமனாய்டு ரோபோ கண்டுபிடிப்பு மையத்தால் உருவாக்கப்பட்டது

மற்றும் பெய்ஜிங்கில் நடைபெற்ற உலக ஹியூமனாய்டு ரோபோ விளையாட்டுகளில் தனது தொடக்கச் சுற்றில் வெற்றி பெற்றது.

- திறன்பேசி நிறுவனமான ஹானர் தயாரித்த லைட்னிங் என்ற மற்றொரு ஹியூமனாய்டு ரோபோ இந்த பந்தயத்தை 9.47 வினாடிகளில் முடித்தது.
- தியாங்காங் அல்ட்ரா ரோபோவானது 2025 ஆம் ஆண்டில் 21.50 வினாடிகளில் இருந்து 2026 ஆம் ஆண்டில் 9.39 வினாடிகளாக முன்னேற்றமடைந்தது மற்றும் 2025 ஆம் ஆண்டில் உலகின் முதல் ஹியூமனாய்டு அரை மாரத்தான் போட்டியிலும் வென்று இருந்தது.
- இந்த விளையாட்டுகளில் கால்பந்து, நடனம் மற்றும் தொழில்துறைப் பணிகள் உட்பட 51 நிகழ்வுகள் இடம் பெற்றன, இதில் 16 நாடுகளைச் சேர்ந்த 666 அணிகளிலிருந்து 2,056 ரோபோக்கள் பங்கேற்றன.




## முக்கிய தினங்கள்

### தேசிய சிறுதொழில் தினம் 2026 - ஆகஸ்ட் 30

- இந்தியாவின் பொருளாதார மற்றும் தொழில்துறை வளர்ச்சிக்கு சிறுதொழில்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சிறுதொழில்களுக்கான விரிவான கொள்கைத் தொகுப்பை அரசாங்கம் அறிமுகப் படுத்திய பிறகு 2000 ஆம் ஆண்டில் இது முறையாக அங்கீகரிக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல், ஒரு சிறு நிறுவனம் ₹25 கோடி வரை முதலீட்டையும், ₹100 கோடி வரை ஆண்டு வருவாயையும் கொண்டிருக்கலாம்.
- இந்தியாவின் GDP-யில் 31.1 சதவீதமும், உற்பத்தி வெளியீட்டில் 35.4 சதவீதமும், ஏற்றுமதியில் 48.58 சதவீதமும் MSME-கள் (குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்)

பங்களிக்கின்றன.

❖ அரசாங்க ஆதரவில் TReDS (வர்த்தக வரவுகள் தள்ளுபடி அமைப்பு), உதயம் பதிவு, கடன் உத்தரவாதங்கள், பொது கொள்முதல் ஆதரவு மற்றும் சாம்பியன்ஸ் (CHAMPIONS) இணைய தளம் ஆகியவை அடங்கும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★